**செய்தி வெளியீடு எண்: 911** **நாள்: 13.12.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 12.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 54 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 57 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கட்டடத்தை திறந்து வைத்து, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தில் 454 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் வட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் நிறுவுதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவித்தல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், நிர்வாக வசதிக்காகவும், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கவும் ஏற்கனவே உள்ள பெரிய வட்டங்களை பிரித்து, புதிய வட்டங்களை உருவாக்கி, அரசு வட்ட மருத்துவமனை இல்லாத புதிய வட்டங்களில், புதிய அரசு மருத்துவமனைகளை படிப்படியாக ஏற்படுத்தும் வகையில், முதற்கட்டமாக 10 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 54 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய 57 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் அவ்வப்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின் பேரில், தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கென அமைக்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள், என இதுவரை 24,664 பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தில் துணைச் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் 18 மாத கால பயிற்சி முடித்த 454 கிராம சுகாதார செவிலியர்களுக்கு, கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் என். ருக்மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**